## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 52/2022**

திருமதி.தங்கமணி (P.W –1) **12.11.2025**

**<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா முதல் பிரதிவாதி என்னுடைய கணவர் என்றால் சரி. என்னுடைய கணவர் மற்றும் அவருடைய சகோதரர் 1999 ஆம் வருடம் சேர்ந்து ஒரு சொத்தை கிரயமாகப் பெற்றார்கள் என்றால் சரி. அந்த சொத்து அவர்கள் இருவரும் 2005 ஆம் வருடம் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரி. அவ்வாறு பாகப்பிரிவினை செய்து கொண்டபிறகு என் கணவருக்கு பிரிந்து வந்த சொத்து தான் தாவா சொத்து என்றால் சரி.

2. அந்த சொத்தை என்னுடைய கணவர் எனக்கு 2007 ஆம் வருடம் தானமாக கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். தாவா சொத்தில் நான் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி சுவாதீனம் பெற்று அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரி. இன்றுவரை நான் அனுபவத்தில் உள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்தில் வீடு உள்ளதா என்றால் இல்லை. விவசாய பூமி நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆடு மாடுகளை சாலையில் வைத்து பார்த்து வருகிறேன். கணவர் பனியன் கம்பெனி வைத்திருந்தார் என்றால் சரி. செகண்ட்ஸ் தொழில் செய்து வந்தார்.

3. என்னுடைய கணவர் அவருடைய வியாபாரத்திற்காக சுப்பிரமணியம் என்பவரிடம் கடன் கேட்டிருந்தார் என்றால் சரி. என்னுடைய கணவர்

என்னிடம் வியாபாரத்திற்கு பணம் கேட்டார். நான் பண வசதி இல்லை. வட்டிக்கு வாங்கிக் கொள்ளும்படி சொன்னேன் என்று சாட்சி தன்னிச்சையாக முன்வந்து கூறுகிறார். கடனுக்கு ஆதரவாக பத்திரத்தை கொடுத்தீர்களா என்றால் ஆமாம். சுப்பிரமணியத்திடம் கடனைப் பெற்றபோது, கடனுக்கு ஆதரவாக பத்திரங்களை கொடுத்திருந்தேன் என்றால் சரி.

4. சுப்பிரமணியம் என்ன வட்டிக்கு கடன் கொடுத்தார் என்றால் ரூபாய் நூற்றுக்கு மூன்று ரூபாய் வட்டி விதம் கொடுத்தார். கடன் பெற்ற போது சுப்பிரமணியம் சொத்தை அடமானம் வைக்க வேண்டாம். நேரடியாக கிரையம் செய்து கொடுக்கும்படி கேட்டார் என்றால் ஆமாம். அதனால் தாவா சொத்தை நான் என் கணவர் பெற்ற கடனுக்காக சுப்பிரமணியத்திற்கு கிரையம் செய்து என்னுடைய சொத்தை கொடுத்துள்ளேன் என்றால் சரி.

5. என்னுடைய கணவர் வட்டி சரியாக செலுத்தினார் என்றால் மூன்று லட்சம் வரை செலுத்தினார். கொரோனா காலம் வந்த பிறகு செலுத்தவில்லை. அதன் பிறகு கடன் தொகையை திருப்பி செலுத்த தயார் செய்து சுப்பிரமணியத்திடம் சென்று கேட்டேன் என்றால் ஆமாம். கடன் அசல் மற்றும் வட்டி எவ்வளவு அந்த சமயத்தில் சுப்பிரமணியத்திடம் கொடுத்தேன் என்றால் வட்டியுடன் சேர்த்து 18 லட்சம் கொடுத்தேன்.

6. ஆவணத்தை சுப்பிரமணியம் கடன் தொகை பெற்றுக் கொண்ட பிறகு திருப்பி கொடுத்து விட்டாரா என்றால் இல்லை. தாவா சொத்தை சுப்ரமணியத்திற்கு கிரையம் செய்து கொடுத்த பிறகு சுப்பிரமணியம் மூன்றாம் தரப்பினருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மூன்றாம் தரப்பினர் மீது கிரைய ஆவணம் ஏற்பட்டது

எப்போது எனக்கு தெரியும் என்றால் தாவா சொத்துக்களை கம்பி போடுவதற்காக மூன்றாம் தரப்பினர் வந்தபோது தெரிந்து கொண்டேன்.

7. அதனால் எனக்கும் என்னுடைய கணவரான முதல் பிரதிவாதிக்கும் அன்றைய தேதியில் இருந்து பிரச்சனை ஏற்பட்டு விட்டது என்றால் ஆமாம். நான் தற்சமயம் என் கணவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன். தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் என்னுடைய மகள் வீட்டில் வசித்து வருகிறேன். குடும்பக் கடனுக்காக என்னுடைய கணவர் சுப்பிரமணியம் மூன்றாம் தரப்பினிற்கு ஏற்படுத்திய கிரய ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். அதை தவறாக எடுத்துக் கொண்டு நான் தாவாவில் முதல் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்தது தேவையற்றது என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பில்குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை வருடங்களாக முதல் பிரதிவாதியுடன் பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் இரண்டு வருடமாக பிரிந்து வாழ்ந்து வருகிறேன். தாவா சொத்தை என்னுடைய கணவர் எனக்கு தானமாக எழுதிக் கொடுத்திருந்தார் என்றால் சரி. அவ்வாறு தானம் கொடுத்த சமயத்தில் பிரதி பிரோயோஜனமாக பணம் செலுத்தீனர்களா எனறால் இல்லை. தாவா சொத்து என்னுடைய கணவர் தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றிருந்தார் என்றால் ஆமாம்.

2. தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சமயத்தில் தாவா சொத்து காலி நிலம் என்றால் சரி. தாவா சொத்திற்கு கடைசியாக எப்போது சென்றேன் என்றால் தாவா சொத்திற்கு கடைசியாக எப்போது சென்றேன் என்றால் தினமும் அந்த சொத்தை நான் பயன்படுத்தி வருகிறேன். என்னுடைய மகள் வீட்டில் இருந்தாலும் நான் தாவா சொத்தை பராமரித்து

வருகிறேன். தாவா சொத்திற்கும் என்னுடைய மகள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 கிலோ மீட்டர்.

3. தாவா சொத்தை சுப்பிரமணியத்திற்கு கிரையம் செய்து கொடுக்கும் போது எவ்வளவு தொகை பெற்றுக் கொண்டேன் என்றால் பத்து லட்சம் பெற்றுக் கொண்டேன். சுப்பிரமணியத்தின் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் கிரையத்தொகை ரூ.4,37,000/- என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சாட்சி பதில் அளிக்கவில்லை. தற்போது சாட்சி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது நான் 10 லட்சம் வாங்கினேன் என்று கூறுகிறார். கிரையத்தொகை போக மீதி தொகையைப் பொறுத்து சுப்பிரமணியத்துடன் ஒப்பந்தம் ஏதேனும் ஏற்பட்டதா என்றால் இல்லை.

4. உண்மையிலேயே கடன் பெற்று இருந்தால் கிரயத்தொகை போக மீதித்தொகை ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தி இருப்பேன் என்றால் அம்மாதிரி ஆவணம் ஏற்படுத்தவில்லை. மீதி தொகையை ரத்து செய்ய வேண்டி நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் இல்லை. கிரைய ஆவணத்தில் தாவா சொத்தை சுப்பிரமணியத்திடம் சுவாதீனம் ஒப்படைத்து அவர் அனுபவம் செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. அவ்வாறு நான் ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை.

5. கிரைய வனத்தில் தாவா சொத்தில் வில்லங்க விவகாரம் ஏற்பட்டால் அதை முன் நின்று தீர்த்து கொடுப்பதாக எழுதிக் கொடுத்து உள்ளேன் என்றால் ஞாபகமில்லை. உண்மையிலேயே அவ்வாறு எழுதி கொடுத்துவிட்டு தற்சமயம் வழக்கிற்காக ஞாபகம் இல்லை என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் தாவா பிரச்சனையை பொறுத்து புகார் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். புகாரை காவல் துறை அதிகாரிகள்

எடுத்துக் கொள்ளவில்லை. மேல் அதிகாரிகளிடம் முறையிட்டீர்களா அல்லது புகாரை பொறுத்து நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் விவரங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை.

6. என் மீதும் என் கணவர் மீதும் 3,4 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண். 144/2021 திருப்பூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்தைப் பொறுத்து தடை மனு ஏதேனும் நானும் என் கணவரும் தாக்கல் செய்தோமா என்றால் அதைப் பற்றிய என்னிடம் எதுவும் சொல்லவில்லை. முன் எச்சரிக்கை மனு தாக்கல் செய்த பிறகு 3,4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 144/2021ல் ஆஜராகாமல் தோன்றாத தரப்பினராக இருந்துள்ளேன் என்றால் மாதிரி வழக்கே இல்லை.

7. தாவா சங்கதிகள் நான் சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. தாவா வழக்குரையில் கூறியுள்ளவாறு ஒவ்வொரு மாதமும் என்ன வட்டி செலுத்தினீர்கள் என்றால் மாதம் ரூ.30,000/– செலுத்தினேன். அதற்கு ரசீது வாங்கி வைத்துள்ளீர்களா என்றால் இல்லை. நம்பிக்கையின் பேரில் கொடுத்து வந்தேன். வங்கி பரிமாற்றம் மூலம் வட்டி செலுத்தப்பட்டதா என்றால் இல்லை, ரொக்கமாக கொடுத்தேன். அம்மாதிரி எந்த வட்டி தொகையும் நான் கொடுக்கவில்லை. அவ்வாறு கொடுத்திருந்தால் அதற்கு ரசீது பெற்றிருப்பேன் என்றால் தவறு. ரசீது கொடுக்கவில்லை.

9. தாவா வழக்குரையில் 9 ஆவது பத்தியில் 18 லட்சம் கொடுத்ததாக சொல்லி உள்ளேன். அதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சிகள் பாஸ்கரன், நடராஜன்,

ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் தான் 18 லட்சம் சுப்பிரமணியத்திடம் கொடுத்தேன். அம்மாதிரி தொகை எதுவும் செலுத்தவில்லை. அவ்வாறு செலுத்தி இருந்தால் அதற்கு ரசீது பெற்று இருப்பேன். வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் காலவரை தோஷத்தால் பாதிப்படைகிறது. நான் கோரியுள்ள பரிகாரங்கள் நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு.

10. தாவா வழக்குரையில் 30 நபர்களுடன் இரண்டாம் பிரதிவாதி தாவா சொத்துக்களை நுழைய முற்பட்டதாக பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் தவறு. தாவா சொத்து என்னுடைய கணவருக்கு பாத்தியப்பட்டு அதன் பிறகு என் மீது தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்பட்ட பிறகு என்னுடைய கணவர் சொன்னதின் பெயரில் சுப்பிரமணியத்திற்கு விற்று சுப்பிரமணியம் அதன் பிறகு மூன்று நான்கு பிரதிவாதிகளுக்கு என்னுடைய கணவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். தற்சமயம் மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல.

11. தாவா சொத்துக்களை அடைய வேண்டி பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா சொத்து என்னுடைய கணவர் ஏமாற்றி விற்று விட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்து உள்ளீர்களா என்றால் இல்லை. என்னுடைய சாட்சியத்தின் மூலம் நானும், என்னுடைய கணவரும் கூட்டாக மற்ற பிரதிவாதிகளை ஏமாற்ற முயற்சிக்கிறோம் என்றால் தவறு. 2015 ல் சொத்துக்களை விற்பனை செய்த போது அதன் மதிப்பு குறைவாக இருந்தது, தற்சமயம் சொத்தில் மதிப்பு

அதிகமாக இருப்பதால் பொய்யான வழக்கு தாக்கல் செய்து பணம் பறிக்க முயல்கிறேன் என்றால் தவறு.

12. தாவா சொத்தை விற்பனை செய்த பிறகு மீண்டும் அதை பெறுவதற்காக நானும் என் கணவரும் கூட்டு சேர்ந்து கொண்டு பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

3, 4 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.11.11 18:33:44 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.